07166

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவிய மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக்கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் -- மட்டம் IV
இறுதிப்பரீட்சை – **2017/2018**
குடும்பச் சட்டம் - **LWU2313 / LLU4707**
காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

---

திகதி : 01.03.2020 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

---

தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

மொத்த வினாக்களின் எண்ணிக்கை : 08

ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

தெரிவு செய்யப்பட்ட வினாக்களுக்கான விடைகள் உம்மால் தீர்க்கப்பட்ட வழக்குகள் மற்றும் நியதிச் சட்டப் பிரிவுகள் என்பவற்றுடன் ஆராயப்பட வேண்டியது கட்டாயமாகும் என்பதை அறியவும்.

1. 2016 ஆம் ஆண்டில் கிருஷ்ணி மற்றும் சங்க ஆகியோர் பொதுச் சட்டத்தின் கீழ் திருமணம் முடித்தனர். திருமணமாகி மூன்று மாத காலத்தின் பின்னர், அவர்கள் இங்கிலாந்திற்கு குடிபெயர்ந்தனர். 2018 ஜனவரியில் தமது வியாபார விடயங்களை கவனிப்பதற்காக கிருஷ்ணி இலங்கைக்கு வருகை தந்தாள். 2018 பெப்ரவரியில் இலங்கையில் இருந்த போது கிருஷ்ணி சுகவீனமுற்றதுடன், மூன்று மாத கர்ப்பிணியாக அவள் இருப்பது அறியப்பட்டது.

   இது குறித்து சங்கவிற்கு தெரிவிக்கப்பட்ட போது, அவன் மிக மகிழ்வுற்றதுடன், இயன்றளவு விரைவில், 2018 மே அளவில் தனது வேலைத்தளத்தில் விடுமுறை பெற்றுக் கொண்டு இலங்கைக்கு வருகை தருவதாக வாக்குறுதி அளித்தான். அவன், கிருஷ்ணியை குழந்தை பிறக்கும் வரை அவளது பெற்றோருடன் தங்குமாறு அறிவுறுத்தினான். எவ்வாறாயினும், அவன் விடுமுறை பெறுவது சிரமமானது எனக் கூறி 2018 மே வரை வருகை தரவில்லை. 2018 ஆகஸ்டில் கிருஷ்ணி ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தாள். கிருஷ்ணியும், அவளது பெற்றோரும் கிருஷ்ணி அவர்களது முதல் குழந்தையைப் பெற்றெடுத்த போது இலங்கையில் இருக்காத சங்கவிற்குத் தமது அதிருப்தியை தெரிவித்தனர். அவன் பல்வேறு காரணங்களைக் கூறி அவனது வருகையை காலம் கடத்திக் கொண்டிருந்தான்.

   கிருஷ்ணி தனது நண்பர்களுள் ஒருவர் மூலம் சங்க, இங்கிலாந்தில் வாழும் அனோமா எனும் பெண்ணுடன் உறவு ஒன்றைக் கொண்டிருப்பதாகக் கேள்வியுற்றாள். 2019 மே மாத இறுதியில், சங்க இலங்கைக்கு வருகை தந்ததுடன், பிள்ளையின் தந்தைமையையும் மறுத்தான். சங்க அவன் இலங்கையில் இருந்த காலத்தில், அவனது பெற்றோரின் வீட்டில் தங்கினான்.

   பிள்ளையின் சட்ட முறை நிலையை நிறுவுவதற்காக கிருஷ்ணி எடுக்கக் கூடிய சட்ட நடவடிக்கை குறித்து ஆராய்க.

   **(20 புள்ளிகள்)**

2. "… பன்மைத்துவ இனங்கள் வாழுகின்ற இலங்கை போன்ற நாட்டிலே வலிதான வழக்காற்று சம்பிரதாயங்கள் வழக்காற்று திருமணம் ஒன்றின் போது கைக்கொள்ளப்பட்டதா என்பதைத் தீர்மானிப்பதில் நீதிமன்றங்கள் பல்வேறு வகையான கடினத் தன்மைகளை எதிர் கொள்கின்றன. பல்வேறுபட்ட சமூகங்கள் வெவ்வேறுபட்ட சம்பிரதாயங்களை திருமண சடங்குகளின் போது பின்பற்றப்படுகின்ற அதே வேளை ஒரே இன சமூகத்தில் கூட வெவ்வேறுபட்ட வழக்காற்று நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. ஆகையால் ஒரு செல்லுபடியான வழக்காற்றுத் திருமணத்திற்குரிய முக்கியமான பண்புகளை தீர்மானிப்பதில் கடினத்தன்மை ஒன்று உள்ளது…."

குடும்பச் சட்டம், அலகு1, இலங்கை திறந்தப் பல்கலைக் கழகம் , பக்கம் 18

ஒரு வலிதான வழக்காற்றுத் திருமணத்தின் முக்கியப் பண்புகளை பொதுத் திருமணம், கண்டியச் சட்டம் மற்றும் முஸ்லீம் சட்டம் என்பனவற்றின் ஆராய்க.

( 20 புள்ளிகள்)

3. ரவிந்திர மற்றும் ஜயனி ஆகியோர் 1985 இல் பொதுச் சட்டத்தின் கீழ் திருமணம் முடித்தனர். அவர்களுக்கு, குஷான் மற்றும் தரிந்தி எனும் இரு பிள்ளைகள் உள்ளனர். தரிந்தி, மனோகரன் எனும் தமிழருடன் உறவு ஒன்றைக் கொண்டிருந்தாள். ரவிந்திர அவர்களது உறவை எதிர்த்தப் போதும், தரிந்தி, மனோகரனை 2017 இல் திருமணம் செய்தாள்.

2018 இல், ரவீந்திர தனது இறுதி விருப்பாணத்தை, அவரது ஐந்து நண்பர்கள் முன்னிலையில் தயாரித்து, அதில் கையெழுத்திட்டார். 2019 ஆம் ஆண்டு மே மாதம் ரவீந்திர இறந்தார். இறுதி விருப்பாவணத்திற்கு அமைய, ரவீந்திர, தன் உடைமையை பின்வருமாறு கையளித்து இருந்தார்.

- நுவரெலியாவில் உள்ள 20 ஏக்கர் தேயிலைத் தோட்டம் - அவரது மகன் குஷானிற்கு
- கொழும்பில் உள்ள வீடு - அவரது மனைவி ஜயனிற்கு
- மகரகமவில் உள்ள 2 ஏக்கர் காணி - அவரது நண்பன் லிலானிற்கு

பின்னுரிமை தொடர்பில், பின்வரும் விடயங்களினை ஆராய்க.

i. தரிந்தி, தனது தந்தையால் எழுதப்பட்ட இறுதி விருப்பாவணத்தின் வலிதாந்தன்மை குறித்து கேள்வியெழுப்புகிறாள்

(07 புள்ளிகள்)

ii. மரண சாதனமின்றி ரவிந்திர இறந்திருந்தால், ரவிந்திரவின் உடைமை எவ்வாறு பகிரப்படும்?

(07 புள்ளிகள்)

iii. திறத்தவர்கள் தேசவழமையால் ஆளப்பட்டு இருப்பின், 1995 இல் தேயிலை தோட்டம் வாங்கப்பட்டும், ரவீந்திர மரண சாதனமின்றி இறந்திருப்பினும் உமது விடை எவ்வாறு வேறுபடும்?

(06 புள்ளிகள்)

4. ' மணஞ்சார் தவறினை' விட 'திருமண முறிவு' விவாகரத்திற்கான அதிக பகுத்தறிவுள்ள அடிப்படையாகக் கருதப்படுகிறது.

மேலுள்ள கூற்றின் அடிப்படையில், விவாகரத்துச் சட்டத்தினை சீரமைப்பதில் இலங்கையின் பதிலை ஆராய்க.

( 20 புள்ளிகள்)

5. பின்வரும் சந்தர்ப்பங்களில் சட்ட அந்தஸ்தை ஆராய்க.

i. சந்திரன் மற்றும் மேதவி ஆகியோர் 2011 இல் மணம் முடித்தனர். நீலா என்பவள் அவர்களது ஒரே மகள் ஆவாள். பின்னர், சந்திரன் ஏற்கனவே திருமணமானவன் என்றும், அவனது முதல் திருமணத்தின் மூலம் இரு பெண் பிள்ளைகளைக் கொண்டிருந்தான் என்றும் மேதவி அறிந்தாள்.

(07 புள்ளிகள்)

ii. சுபிப்பி மற்றும், கயான் ஆகியோர் 15 வருடகாலமாக திருமணமாகி உள்ள போதும், அவர்களுக்கு பிள்ளைகள் இல்லை. சுபிப்பி பிள்ளை ஒன்றை மகவேற்க விரும்பிய போதும், கயான் அதனை விரும்பவில்லை என்பதையும் அவள் அறிவாள். அருகில் உள்ள கிராமம் ஒன்றில் வாழும் 11 வயது நிரம்பிய நீலக எனும் பிள்ளையின் பெற்றோர், தமது பிள்ளையை சுபிப்பி மற்றும் கயானிற்கு மகவளிக்க விரும்புகிறனர். சுபிப்பி பிள்ளையை மகவேற்க இணங்குவதுடன், நீலகவின் பெற்றோரும் அதற்கு உடன்படுகிறனர். எவ்வாறாயினும், நீலக தனது பெற்றோரை விட்டு நீங்க மறுக்கிறான்.

(07 பள்ளிகள்)

iii. பராக்கிரம எனும் 18 வயதுடையவன் கண்டியில் வாழ்கிறான். அவன், பேராதெனியவில் வாழும், 16 வயது நிரம்பிய தாரணியை கண்டியச் சட்டத்தின் கீழ் மணம் முடித்தான். தாரணி, திருமணமான ஒரு வருடத்தின் பின்னர் பிள்ளை ஒன்றைப் பெற்றெடுத்தாள்.

(06 புள்ளிகள்)

6.

i. எரந்த மற்றும் சலனி ஆகிய இரு வங்கிப் பணியாளர்களும், பொதுச் சட்டத்தின் கீழ் திருமணம் முடித்து உள்ளனர். அவர்களது திருமணத்தின் பின்னர், மாத்தறையில் வாடகை வீடு ஒன்றில் வசித்தனர். திருமணமாகி ஒரு வருடத்தின் பின்னர், சலனி, அகில மற்றும் விபுல எனும் இரட்டையர்களைப் பெற்றெடுத்தாள். பிள்ளைகளை கவனித்துக் கொள்வதற்காக சலனி அவளது தொழிலில் இருந்து விலகியதுடன், எரந்த உதவி முகாமையாளராக பணி உயர்த்தப்பட்டான். சலனி மற்றும் பிள்ளைகள் மீதான எரந்தவின் கவனிப்பு நாளடைவில் குறைந்ததுடன், இது குறித்து சலனி வினவிய போது, எரந்த வங்கியில் வேலைப்பளு அதிகரித்து உள்ளதாகக் குறிப்பிட்டான். இதே வேளை, எரந்த சகல வார இறுதியிலும், தான் பட்டப்பின்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை தொடருவதாகக் குறிப்பிட்டு கொழும்பிற்குச் செல்ல ஆரம்பித்தான். எரந்த போதுமானளவு பணம் வீட்டுச் செலவிற்கு அளிக்காதக் காரணத்தால், சலனியும் பிள்ளைகளும் சிரமங்களுக்கு உள்ளாகினார்.

இக்காலக் கட்டத்தில், சலனியின் உறவினர் ஒருவர், எரந்த கொழும்பில் பெண் ஒருவருடன் நெருங்கிய உறவு ஒன்றைக் கொண்டுள்ளதாக சலனிக்கு தெரிவித்தார்.

சலனி தனது பெற்றோருக்கு இது குறித்து தெரிவித்ததுடன், அவளது பெற்றோர் இது தொடர்பில் எரந்தவை விசாரித்த போது, அவன் கோபமுற்றதுடன், சலனியும் அவளது பிள்ளைகளும் உடனடியாக வீட்டை விட்டு வெளியேற வேண்டும் எனக் கோரினான். இச்சம்பவம் நிகழ்ந்து, ஒரு வார காலத்தின் பின்னர், எரந்த கொழும்பிற்கு பணிமாற்றம் பெற்றதுடன், சலனியையும் பிள்ளைகளையும் பராமரிப்பதை நிறுத்தினான்.

சலனி, தனக்கும் தன் பிள்ளைகளுக்கும் எரந்தவிடம் இருந்து பராமரிப்பு பெறும் சாத்தியம் குறித்து அறிவுறுத்துமாறு உம்மை நாடுகிறாள். அவளிற்கு அறிவுறுத்துக.

( 15 புள்ளிகள் )

ii. திறத்தவர்கள் முஸ்லிம் சட்டத்தின் கீழ் ஆளப்பட்டிருப்பின் உமது விடை வேறுபடுமா? விளக்குக.

( 05 புள்ளிகள்)

7. பொது அல்லது தனியார் சமூகநல நிறுவனங்கள், நீதிமன்றங்கள், நிர்வாக அதிகார சபைகள் அல்லது சட்டவாக்க அமைப்புகள் ஆகிய எவற்றால் மேற்கொள்ளப்பட்ட போதும், பிள்ளைகள் தொடர்பான சகல செயல்களிலும் பிள்ளையின் சிறந்த அக்கறை ஆனது முதன்மை எண்ணமாக இருக்க வேண்டும்.

- *உறுப்புரை 3 (1), பிள்ளைகளின் உரிமைகள் மீதான சமவாயம்*

மேலுள்ள கூற்றை கவனத்திற் கொண்டு இலங்கையில் பிள்ளைகளின் சிறந்த அக்கறையை உறுதி செய்வதற்கான சட்டவாக்க மற்றும் நீதியியல் முயற்சிகளை ஆராய்க.

( 20 புள்ளிகள் )

8. பின்வரும் வழக்குகளின் மீது அவற்றின் சட்ட முக்கியத்துவத்தை விளக்கி குறிப்புகள் எழுதுக.

i. *Ambalavanar* Vs. *Navaratnam (1955) 56 N.L.R.422*
ii. *Jeyarajan* Vs. *Jeyarajan (1999) 1 Sri L.R.113*
iii. *Abeysundere* Vs. *Abeyasundere (1998 ) 1 Sri L.R.185*
iv. *Jayasinghe* Vs. *Kiribindu (1997) 2 Sri L.R.1*
v. *Ghouse* Vs. *Ghouse (1988) 1 Sri L.R.25*

**(04 x 5 = 20 புள்ளிகள் )**

பதிப்புரிமை பெற்றது.